

மூளாயூர்

அமரர் திருமதி கனகம்மா சிவசுப்பிரமணியம் அவர்கள்

இறைபதம் எய்தியமை குறித்து அன்னாரின் நீங்கா நினைவிற்காய் வெளியிடப்பெறும்

# நினைவு மலர்

26.08.2005

தாயாரைத் தெய்வமென எண்ணியே பணிந்தோரை
வாயாரத் தேவரும் வாழ்த்தியே விதந்துரைப்பர்
பேயாகிப் பிறப்பொன்றில் போயகல வேண்டுமெனில்
சேயாகித் தாயார்க்கு செய்பணியே வழி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்ட

# அமரர் திருமதி
# கனகம்மா சிவசுப்பிரமணியம் அவர்கள்

பிறப்பு
18
02
1927



மறைவு
27
07
2005

**தாயாரை எண்ணுதற்கோர்**
**தயவான திதி வெண்பா**

பார்த்திப ஆண்டினிலோர் ஆடியாம் மாசமதில்
நேர்த்தியாய் வாழ்ந்திட்ட நம்மன்னை கனகம்மா
பூர்த்தியாய் தன்வாழ்வை புகழுடனே முடித்திட்டு
கீர்த்தியிறை சேர்ந்ததிதி அபர ஸப்தமியாம் என்றே துதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்னை நினைத்திட வழியறிவோம்
இங்கே நிலைத்திடநாம் வழியறியோம்
ஆதலினால் தந்தோம் இம்மலரை

# சமர்ப்பணமாய் ஏற்றிடுவீர்

பூர்வமதின் புண்ணியத்தால் பூவுலகில் தானுதித்து
சீர்தவழச் சிறுமியென செல்வியென வளர்ந்து
பார்புகழும் இல்லத்து அரசியாய் பரிணமித்து
சோர்வறியா வாழ்வதனை சொல்லியே தந்திட்ட
ஓர்தாயாற் குதாரணமாம் கனகம்மா அம்மையவர்
ஊர்விட்டு உறவோடு உடல் விட்டுச் சென்றதனால்
பேர்பூத்த மலரதுவாம் நினைவெனுமோர் மலரெடுத்து
சேர்த்திடுவோம் மலரடிக்கே ஏற்றிடுவீர் சமர்ப்பணமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மையாரின் ஆத்மா சாந்திபெற
# பஞ்சபுராணம் ஓதுவோமாக

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலால் கூப்புவர் தங்கை.

## தேவாரம்

திருநாமம் அஞ்செழுத்தும் செப்பார் ஆகில்
தீவண்ணர் திறம் ஒருகால் பேசார் ஆகில்
ஒருகாலும் திருக்கோயில் சூழார் ஆகில்
உன்பதன்முன் மலர் பறித்திட்டு உண்ணார் ஆகில்
அருநோய்கள் கெடவெண்ணீறு அணியார்ஆகில்
அணியற்றார் பிறந்தவாறு ஏதோ என்னில்
பெருநோய்கள் மிகஅரியப் பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கோ தொழிலாகி இறக்கின்றாரே!

## திருவாசகம்

பால் நினைந்தூட்டும் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவ தினியே!

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந்தனவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி ஈசற்கு
ஆட்செய்மின் குழாம் புகுந்து
அண்டங்கடந்த பொருள் அளவிலதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றுமுள்ள பொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே!

## பெரிய புராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் யுன்றன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே யெனக்கு
வாலிதா மின்பமா மென்று
கண்ணினால் ஆனந்த அரிவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேல் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்!

## திருப்புகழ்

இசைந்த ஏறும் கரியுரி போர்வையும் எழில்நீறும்
இலங்கு நூலும் புலியதனாடையும் மதமானும்
அசைந்த தோடும் சிரமணிமாலையும் முடிமீதே
அணிந்த ஈசன் பணிவுடன் மேவிய குருநாதா
உசந்தசூரன் கிளையுடன் வேர்ற முனிவோனே
உசந்த பாசக் கயிறொடு தூதுவர் நலியாதே
அசைந்த போதென துயிர்கென மாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே.

*இறைவன் படைத்தவற்றையே இறைவனுக்கு படைத்துவிட்டு இறைபக்திஉடையவர்கள் என்று எம்மைக் காட்டிக் கொள்வதிலும் பார்க்க இறைவனாற் படைக்கப்பட்ட ஏனையவற்றிற்கு அனுசரனை உடையவர்களாக எம்மை ஆக்கிக் கொள்வதே இறைவன் விரும்புகின்ற உண்மையான இறை பக்தியாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் திருமதி

# கனகம்மா சிவசுப்பிரமணியம் அவர்கள் வாழ்வில் பதிந்தவை

முத்துக் குமரனொடு
மத்தள வயிறனும்
நித்தம் குடியிருக்கும்
இத்தலம் மூளாயில்
வைத்திலிங்கம் என்றோர்
மெத்தச் சிறந்தமகன்
கைத்தலம் பற்றியே வள்ளியம்மையாரை
வித்தக வாழ்வுற்றார் வியந்திடநாமே!

வைத்திலிங்கம் வள்ளியம்மை
தம்பதியர் இல்வாழ்வில்
நித்திய மங்கலங்கள்
நிறைந்திடவே பெற்று
உத்தம வாழ்வதனில்
ஊன்றித் திளைக்கையில்
தத்தித் தவழ்ந்திட தமக்கென ஐவரை
வைத்தனர் மக்களாய் வையத்து மகிழ்ந்தே!

மனோன்மணி என்றோர்
அம்மணியாரையும்
சிவக்கொழுந்தாரொடு
வேலுப்பிள்ளையாரையும்
பொன்னம்மா என்றோர்
பொன்மகள் கூடவே
கனகம்மா தன்னையும்
களிப்புறப் பெற்றனர்!

கனகம்மா மகள்
காவியத் தலைவியாய்
தாவித் திரிந்திடும்
மானின் வடிவதாய்
வையத்தில் வாழ்ந்து
வளம்பல பெற்றே
சைவப் பிரகாசாவில்
கல்வியும் பெற்றார்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்கள்

திரு. திருமதி சிவசுப்பிரமணியம் கனகம்மா

அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகம்மா கல்வியில்
வல்லவராகவே
கலையெலாம் கற்று
நிலையினில் உயர்ந்திட
விலைமதிக்க வொண்ணாத்
தலைவியாய் ஆக்கவே
தரம்பல பார்த்து
தாரமொன்று சேர்த்தனர்

ஊரிலோர் உத்தமர்
நாகலிங்கத்தார்
சிதம்பரம் அன்னையொடு
சேர்ந்தே பெற்றிட்ட
சிவசுப்பிரமணியமாம்
சீருடை மைந்தரை
வரமெனப் பார்த்தே
மணமாலை சூட்டினார்!

கனகம்மா சிவசுப்பிரமணியம்
தம்பதியர் இல்வாழ்வில்
இணையது பிரியா
அன்றிலென வாழ்ந்து
நிறைகுடம் போலவே
நிலையதில் உயர்ந்திட
ஐவரை மக்களாய்
அகிலத்துக்கு வந்தனர்!

விக்கினேஸ்வரன் மகனை
விருப்புடனே பெற்றெடுத்து
கல்வியும் கலையும்
களிப்புற ஊட்டி
சாந்தமலர் நங்கையை
மருமகளுமாக்கி
கனடாவில் வாழ்ந்திட
கண்டே மகிழ்ந்தார்!

கணேஸ்வரன் மைந்தனை
இணையின்றிப் பெற்று
இலட்சிய நெறிகளை
இடையறா தூட்டி
செல்வமதியாளை
மருமகளுமாக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரராய் பிரியங்கன் அபிநயன் தன்னை
பெற்றே மகிழ்ந்தார் பிரியாதிருந்தார்!

மகாலட்சுமி மகளினை
மங்கலமாய்ப் பெற்று
பொங்கு புகழூட்டி
புவிமிசை காத்து
சோமஸ்கந்த ராஜாவை
மருமகனாக்கி
பேரராய் தனேஷன், தர்ஷிகா தனைப்பெற்று
இணையின்றி வாழ்ந்தார் இன்பம் சூழவே!

விஜயலட்சுமி
வித்தகியாரை
விருப்புடனீன்று
விந்தைகள் ஊட்டி
சிவநாதன் தன்னை மருமகனுமாக்கி
பேரராய் சிவாஜினி, சிவானியோடு
சிவகஜன் தன்னையும் சிறந்தே பெற்று
டென்மார்க்கில் வாழவே வழிசெய்து மகிழ்வித்தார்!

இராசலட்சுமியாம்
பிள்ளையாளையீன்று
பாசத்தோடு பரிந்து காத்து
ஸ்ரீகரன் தன்னை மருமகனுமாக்கி
பேரராய் விபுசா, பவிசாதன்னை
பெற்றே வாழ்ந்து
பெருங்கிளைவிட்டு
நன்றே வாழ்ந்தார் நானிலந்தன்னில்

கனகம்மா அன்னையின்
வாழ்வாம் விருட்சம்
தளைத்து ஓங்கி விழுதுகள் விட்டிட
பழுது ஒன்றும் பாய்ந்தது போலவே
கணவனார் காலன் கைவசப்பட்டு
வீழ்ந்திட வாழ்வில் விருப்பதுமின்றி
பிள்ளைகள் வாழ்வுக்காய்
வையத்தில் வாழ்ந்தார்!

வாழும் போதிவர்
கணவனை இழந்ததால்
நொந்தே நோயின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடியில் வீழ்ந்து
ஆண்டுகள் சிலவாய்
அவஸ்தைப் பட்டே
பிள்ளைகள் கரத்தினில்
தங்கியே வாழ்ந்தார்!

இருதயம் தன்னையே
தானால் ஓட்டினார்
ஏனைய அனைத்தையும்
பிள்ளைகள் ஏற்றனர்
காலையும் மாலையும் மாறிமாறியே
கண்ணியமாய் அவர் கடமைகள் செய்தனர்
புண்ணியம் என்ன செய்தாரோ கனகம்மா
பிள்ளையைப் போலவரை பிள்ளைகள் காத்தனர்!

உண்ணப் பாலது
அருகினில் இருந்து
பக்கத்து துணையதாய்
பிள்ளைகள் இருந்தனர்
துக்கம் தோய்ந்த
முகத்தோடு தாயவர்
கேட்டிட ஏதோ
ஏங்கித் துடித்தார்!

அம்மா என்னது
வேண்டும் என்றே
அருகில் இருந்தே
பிள்ளைகள் கேட்டிட
இருவிழிதன்னை
அம்மையார் மூடியே
உலகினைக் கடந்தார்
இறையடி சேர்ந்தார்!

ஆண்டு இரண்டு
ஆயிரத்தி ஐந்து
பார்த்திப வருடம்
ஆடியாம் மாசமதில்
அபரபக்க ஸப்தமிதிதியில்
எம்மோடு வாழ்ந்த எம்தாயார் கனகம்மா
எம்மை விட்டே எமக்கெலாம் மேலான
தலைவனை அடைந்தார் தலைவிதி முடித்தே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

## திருமதி கனகம்மா சிவசுப்பிரமணியம் அவர்தம் பெருமதியை எண்ணும் பிள்ளைகள்

எப்படி எமக்கிந்த உடல் தந்தாய் நாமறியோம்
எப்போது எம்முடற்கு மூச்சளித்தாய் நாமறியோம்
எப்படி உன்னுடலில் எமையிணைத்தாய் நாமறியோம்
எப்போது எம்முடலில் உயிர்வைத்தாய் நாமறியோம்
அப்பப்பா எத்தனைதான அற்புதங்கள் நீ புரிந்தாய்
ஒப்பரியதாயே எம் கனகம்மா அன்னையே
செப்பிடுவோம் என்றும்நாம் உயிருள்ள வரையினிலே
இப்புவியில் உமக்கிணையாய் இன்னுமோர்தாய்
வருவாரோ!

## அன்றும் இன்றும் மாமியை மதிக்கும் மருமக்கள்

மனம்போல எமக்கு நல்ல வாழ்வளித்த அன்னையே
தினம்தினம் அருகிலிருந்து எமைக்காத்த தெய்வமே
கனம் பண்ணி உமையன்றோ கண்ணிறைய
வைத்திருந்தோம்
சினந்தனையே சிந்தாமல் சிறுபிள்ளை போல் வாழ்ந்தீர்
தனம்பொருள் தந்தெம்மை தரணியிலே மிளிரவைத்த
கனகம்மா மாமியாரே நாம் கண்கண்ட தெய்வமே
இனம் கண்டுஉமையன்றோ இதயத்தில் நாமிருத்த
வனம்சென்றீர் தகுமோ இதுமுறையோ சொல்வீர்.

## பேத்திக்காய் தேம்பியழும் பேரப்பிள்ளைகள்

அப்பம்மா அம்மம்மா ஆனஎங்கள் கனகம்மா
ஒப்பரிய பெற்றோரை எமக்களித்தீர் பாரினிலே
எப்போதும் எமைக்காக்கும் கலங்கரையாய் நீர்இருந்தீர்
அப்போது உம்மதிப்பை அறிந்திடநாம் மறந்திட்டோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இப்போதோ உமையெண்ணி இதயம்நாம் கலங்குகிறோம்
செப்பிடுவீர் எங்குற்றீ செகமெலாந் தேடுகின்றோம்
தப்பேதும் நாம் செய்தால் தயவாக மன்னித்தே
உப்பிட்டீர் வந்திடுவீர் உள்ளொளிதான் பெருகிடவே!

## கூடிப் பிறந்த என் சோதரியே சொல்லிடுவாய்

கூடிப்பிறந்ததனால் கோடியின்பம் நாமடைந்தோம்
பாடித்திரிந்த அந்தப் பாலகத்தை எண்ணுகின்றோம்
ஓடித்தான் வந்தெமக்கு உற்றதுணை நீயாகி
தேடித் தந்தவற்றால் கூடிமனம் மகிழ்கின்றோம்
வாடிப் போனதொரு வண்ணமலர் நீயாகி
ஆடிக்காற்றதனில் அடிபட்டு வீழ்ந்ததென்ன
சூடிக்கொடுத்தனையோ உன்னுடலை இறையடிக்கே
நாடிக் கனகம்மா கேட்கின்றோம் சொல்வாயோ!

## உற்றார், உறவினர் ஊர்மக்களின் உள்ளக் குமுறல்

கனகம்மா என்றோர் கண்ணியத்தை நாம் கண்டோம்
தினமந்த மனத்துள்ளே இளைப்பாறித்தான் மகிழ்ந்தோம்
இனம்சனம் என்றெமக்கு இணையிலாத் துணைநின்றே
தனம்பொருள் தந்திட்ட நாளெண்ணித்தான் மகிழந்தோம்
சினமேதுங்கொள்ளாமல் சீரித்தமுறையெண்ணி
கனங்கொண்டு மனத்துள்ளே களிப்புற்று நாமிருக்க
வனங்கொண்டு போதற்கு வந்தவரை நேசித்தோ
மனங்கொண்டு போனீரெம் மாதரசே சொல்வீர்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் என்பது ஒரு பாத்திரமல்ல
# வாழ்க்கையின் ஆதாரமே அவள்தான்

*தாய் என்பவள் ஒரு பாத்திரமல்ல எமது வாழ்க்கையின் ஆதாரம் அவள்தான் வர்ணத்துப் பூச்சியதாய் பூமியில் சிறகடித்து, எண்ணத்தைக் கவரும் படி எழில் கொஞ்சும் அழகுபெற்று தனக்குள் ஓர் உலகைத் தானாக உருவாக்கி, உள்ளத்தினில் உள்ளே ஓர் பாசப்படுக்கையிட்டு தொட்டிலும் கட்டிலும் தானாகி எமைதாங்கி, உண்பதற்கும் குடிப்பதற்கம் உதிரத்தை உணவாக்கி உறங்கிட ஊதிடும் குழலாகி இசைமீட்டு, பத்தியங்கள் காத்திருந்து பகலிரவாய் விழித்திருந்து பள்ளிக்கு அனுப்பி துள்வரத் தோள்தூக்கி அள்ளி அணைத்தெம்மை ஆழாக்கும் தெய்வம்தாய். அத்தகையதோர் தாயின் வடிவை நான் அமரர் கனகம்மா சிவசுப்பிரமணியத்தின் வடிவில் கண்டேன். அவருடைய பிள்ளைகள் அவரோடு நடந்து கொண்ட முறையிலிருந்து அந்த உண்மையை நான் உணர்ந்து கொண்டேன்.*

*அமரர்*

*திருமதி கனகம்மா சிவசுப்பிரமணியம் அவர்களின் ஆத்மா சாந்தி பெறுவதாக.*

*மூளாய்*
*26-08-2005*

*இங்ஙனம்*
**பிரம்மஸ்ரீ சி. ஜெயானந்தசர்மா**
வதிரன்புலோ சித்திவிநாயகர்
தேவஸ்தானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னைக்கு வழித்துணையாய்
# வதிரன்புலோவான் வருவான்

*மூளாய் ஊரோனே முத்தமிழை அருள்வோனே*
*ஆளாக்கி எமையிந்த அவனியிலே காத்தோனே*
*தூளாக்கி எம்வினைகள் துரத்திடவே துணைநின்று*
*நாளாக்கிக் கொண்டின்றோ கணபதியே காத்தருள்வாய்!*
*(மூளாய் - ஊரோனே முத்த...)*

*கல்லோடு உடைத்தன்று கயவர்கள் கொண்டுவந்து*
*நெல்லோடு வயல்தனிலே விதைத்திட்டுப் போனதனால்*
*எல்லோரும் போற்றிடவே எழுந்தருளி வதிரன்புலோ*
*வல்லோனாய் வீற்றிருக்கும் கணபதியே காத்தருள்வாய்!*
*(மூளாய் ஊரோனே முத்த....)*

*உழுதொழிலே உயர்வென்று உலகிற்கு காட்டிடவோ*
*எழுதுதற்கு கொம்பொன்று உடைத்தன்று காட்டியநீ*
*கொழுவினிற்குள் அகப்பட்டு குளத்தருகே எழுந்துநின்று*
*விழுதூன்றும் வதிரன்புலோ கணபதியே காத்தருள்வாய்!*
*(மூளாய் ஊரோனே முத்த....)*

*இன்பலனை நீரினிலே நீ தீர்த்தம் ஆடிடவோ*
*அன்பற்கு அச்சத்தைக் கொடுத்துநீ அதைமுடித்து*
*துன்பஇருள் நீக்கிடவோ தூயஒளி காட்டிவந்து*
*முன்னின்றால் வதிரன்புலோ கணபதியே காத்தருள்வாய்!*
*(மூளாய் ஊரோனே முத்த....)*

*பழுவிலோர் வடுத்தாங்கி பரமசிவன் புத்திரனே*
*உழுதிடவே உன்னுதிரம் தந்திட்டாய் மூளாய்க்கு*
*அழுதிடுவோம் எழுதிடுவோம் ஆனந்தக் கூத்தாடிநாம்*
*தொழுதிடுவோம் வதிர்ன்புலோ கணபதியே காத்தருள்வாய்!*
*(மூளாய் ஊரோனே முத்த....)*

**கவியாக்கம் :**
**ஆசுகவி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனதார நேசிக்கும்
## தாயாரை மறப்போமாக!

பாசம் துடித்தளைக்க பக்கத்தே வந்திருந்து
நேசத்தால் நெய்தடவி மேனிமடிமீது வைத்து
பேசத் தமிழ்ச் சொல்லி பெருங்கதைகள் தானூட்டி
தேசத்தில் எமைக்காத்த தாயாரை மறப்போமோ!

தலைவியாய் இருந்துநல்ல கலையெல்லாம் கற்பித்து
நிலையினில் நாமுயர விலையினை தனதாக்கி
உலைமூட்டி உயிர்காத்த உத்தமத்தின் மொத்தமதாம்
மலையென உயர்ந்திட்ட தாயாரை மறப்போமோ!

தன்னவன் உண்டபின்பு தானுண்டு உயிர்வாழ்ந்து
பின்பிள்ளைக் குணவளித்து பரிமாறி பசியாறி
அன்பினால் அகிலத்தை தொடுத்திடும் தூயவளாம்
பொன்மனத் தெய்வமெனும் தாயாரை மறப்போமோ!

கனகம்மா என்றதோர் தாயாரித் தாயாராம்
மனம்போல வாழ்ந்தவர் வானுறையச் சென்றிட்டார்
தினம் தினம் இவர் வாழ்வை எண்ணிநாம் பணிந்திடுவோம்
தனம்பொருள் செல்வமெலாம் தாயாரே- நம்பிடுவோம்!

**அம்மையாரின் ஆத்மா சாந்திபெற வேண்டி நிற்கும்**

**செ. சிவசுப்பிரமணியம்**
மூளாய்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறந்தவர் ஒருநாள் இறப்பது திண்ணம்
## மாற்றமே இல்லை
## தேற்றம் கொள்வீர்!

மனமெல்லாம் நிறைந்திருந்த கனகம்மா எனும் தாயார்
தினம் தினம் எம்மோடு வாழ்ந்திட்டவாழ்வு விட்டு
தனம்பொருள் செல்வமெலாம் தரித்திடாதென்றெண்ணி
இனம் சனம் இங்கிருக்க இறைவனை மனத்திருத்தி
கனமில்லா மடியோடு கானகத்து வளிதேடி
சினமின்றிச் சென்றிட்டார் என்றெவரும் கலங்காதீர்
வனந்தனிலே வாழ்கின்ற வார்சடையான் வந்தவரை
ஆனந்தவாழ் வளிக்க அழைத்திட்டார் தேறிடுவீர்!

### வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவில்கின்றோம்

எமது பாசமிகு குடும்பத் தலைவி
திருமதி கனகம்மா சிவசுப்பிரமணியம் அவர்கள்
நோய்வாய்ப்பட்டிருந்தபோது உடலாலும் உள்ளத்தாலும்
அவருக்கு ஆறுதல் அளித்தவர்களுக்கும், நோயின் காரணமாக
அவர் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு இல்லம் வந்து
துயரத்தில் பங்குகொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள்
மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும், இறுதிக் கிரியைகளில் பங்கு
கொண்டு உதவியவர்களுக்கும் மேலும் எல்லா வழிகளிலும்
உதவி ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் இன்றைய அந்தியேட்டிக்
கிரியைகளில் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்ம
சாந்திக்காய் பிரார்த்தித்த அனைவருக்கும் எமது
உளம் கனிந்த நன்றியையும் வணக்கத்தையும்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி வணக்கம்.

**என்னன்றி கொன்றாற்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்

வயிரமுத்தர் + யோகநாயகி

சிதம்பரம் + நாகலிங்கம்

கதிராசிப்பிள்ளை + சின்னத்தம்பி

சின்னத்தங்கம் + கந்தப்பர்

வேலுப்பிள்ளை + தெய்வானைப்பிள்ளை

சின்னப்பிள் + நாராணபிள்

மனோன்மணி + கதிரவேலு

சிவக்கொழுந்து + நடராசா

பொன்னம்மா + குமரகுரு

கனகம்மா + சிவசுப்பிரமணியம்

வேலுப்பி + கனகம்

நடராச + சிவக்கொ

விக்கினேஸ்வரன் + சாந்தமலர்

கணேஸ்வரன் + செல்வமதி

பிரியங்கன்
அபிநயன்

மகாலட்சுமி + சோமஸ்கந்தரா

தனேஷன்
தர்ஷிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ம்சாவழி

கி

பிள்ளை + பிள்ளை

அப்பாப்பிள்ளை + சின்னத்தங்கச்சி

வைத்திலிங்கம் + வள்ளியம்மை

ப்பிள்ளை + கம்மா

**வேலுப்பிள்ளை + நாகமுத்து**

நாகலிங்கம் + சிதம்பரம்

சபாபதிப்பிள்ளை + தங்கமுத்து

அப்பாத்துரை + தெய்வானைப்பிள்ளை

ராசா + காமுந்து

கந்தசாமி + வள்ளிநாயகி

சிவசுப்பிரமணியம் + **கனகம்மா**

சுமி + ராஜா

ன்

விஜயலட்சுமி + சிவநாதன்

சிவாஜினி
சிவானி
சிவகஜன்

இராசலட்சுமி + சிறிகரன்

விபுசா
பவிஷா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்
அது வேறொருவருடையதாகும்.



"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்."

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.**

கலாமகள் அச்சகம் – சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org